**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

**<u>(Chapter XXV of BNSS)</u>**

**<u>M.C. No. 4/2024</u>**

Name : இந்திரகுமார் (RW-1 Cross) Date : 10.02.2026

Father Name : பாலையன் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1. நான் முதுநிலை ஆசிரியராக கீழப்பெரும்பள்ளம் அரசு மேல்நிலை பள்ளியில் பணியாற்றி வருகிறேன். 1ம் மனுதாரர் எனது தந்தை, 2ம் மனுதாரர் எனது தாயார் என்றால் சரிதான். எனக்கு செந்தில் குமார் என்ற சகோதரர் உள்ளார் என்றால் சரிதான். அவர் மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுதிறனாளி என்றால் சரிதான். எனக்கு முத்துலெட்சுமி என்ற சகோதரி உள்ளார் என்றால் சரிதான். அவர் திருமணம் ஆகி அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி எனது மனைவியுடன் தனிக்குடுத்தனம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தனியாக வசித்து வருகிறேன். எனது மனைவியுடன் வசிக்கவில்லை.

2. நான் M.sc., M.Phill. M.Ed., Dlis படித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி படிப்பை எனது பெற்றோர்கள் தான் படிக்க வைத்தார்கள் என்றால் சரியல்ல. 5ம் வகுப்பு முதல் எனது மாமா மாசிலாமணி தான் என்னை படிக்க வைத்தார். நான் சொல்வது தவறு என்றாலும், என்னை எனது பெற்றோர்கள் தான் படிக்க வைத்தார்கள் என்றாலும் சரியல்ல. எனக்கு கல்வி கட்டணம் முழுவதும் எனது பெற்றோர்கள் தான் கவனித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு எனது பெற்றோர்கள் தான் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. எனது பெண் பார்க்க கூட எனது பெற்றோர்கள் வரவில்லை. எனது தந்தை குடிபழக்கத்திற்கு அடிமையானதாக எனது நிருபண வாக்குமூலத்தில்

சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது சகோதரியின் திருமணத்திற்கு நான் செலவு செய்ததற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது பெற்றோர்கள் தான் எனது தங்கையின் திருமணத்திற்கு அனைத்து செலவுகளும் செய்து நடத்தி வைத்தார்கள் என்றால் சரியல்ல. நான் கடன் பெற்றதாக சொல்லியுள்ளவை அனைத்தும் எனக்காகவே மட்டுமே கடன் பெற்றுள்ளேன் என்றாலும், எனது பெற்றோருக்காக கடன் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எனது மனைவியிடம் எனது தந்தை தவறாக நடந்து கொள்ள முயற்சித்தது சம்பந்தமாக நான் புகாரும் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது தனிப்பட்ட நடத்தையின் காரணமாக தான் எனது மனைவி என்னிடமிருந்து பிரிந்து சென்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோரை பராமரிக்கவில்லை என்றாலும், எந்த செலவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொறையார் காவல் நிலைய ஆய்வாளர் முன்னிலையில் எனது பெற்றோருக்கு ரூ. 17,000/– பணம் கொடுத்தேன்.

4. என்னை படிக்க வைத்து வளர்த்து ஆளாக்கிய எனது பெற்றோரை பராமரிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்றாலும், அந்த கடமையை நான் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது சகோதரரை வைத்துகொண்டு எனது பெற்றோர் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விவசாயத்தின் மூலம் ரூ. 50,000/– வரும் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எந்த பெற்றோரும் தனது மகன் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் நினைப்பார்களே தவிர நான் சொல்வது போல் பழி வாங்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. மகன் என்ற முறையில் மனுதாரர்களை பராமரிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்றால் சரியல்ல.